கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு

மாசி 2005 | 1974 பிப்ரவரி

சினிவாசநல்லூர் நாட்டிய மகளிர்

30

அறிவியல்
வரலாற்றுத்

கொங்கு

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ

தேனடை 4 15–2–74 தேனீ 2

வணக்கம்

அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட தமிழக வரலாற்றுப் பேரவையும், அதன் கிளைகளும் ஆங்காங்கு நல்ல முறையில் செயல்படுவது குறித்து மிக்க மகிழ்ச்சி. பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்து ஆராயப்படுகின்றன. அந்தக் கட்டுரை பின் எப்போதும் வெளிச்சத்தைக் காண்பதே இல்லை. காற்றோடு கலந்து போய்விடுகின்றன. அதே பொருளில் ஆராய்ந்து கொண்டிருக்கும் இன்னொரு ஆராய்ச்சியாளருக்குத் தகவலை தெரிய வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றது.

கொங்கு 24 பக்கமே வருவதால் முழுக்கட்டுரை வெளியிட இயலாது. அதனால் கட்டுரையின் சுருக்கத்தையும் அதன் முடிவையும் ஒரே பக்கத்தில் வருமாறு சுருக்கி அனுப்பினால் வெளியிடுகிறோம். கட்டுரை ஆசிரியரே சுருக்கம் செய்து அனுப்ப வேண்டும். முழுக்கட்டுரையின் படியையும் அனுப்பி வைத்தால் வேறு இதழ்களோடு, தொடர்பு கொண்டு அவற்றிலாவது வெளியிட முயற்சிப்போம்.

கட்டுரைகளைப் படிக்குமுன்னரே, முழுக் கட்டுரையையும், சுருக்கத்தையும் எழுத்துமூலம் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள், முடிந்தால் அவற்றைத் தலைமைநிலையத்திற்கும், பிற கிளைகளுக்கும் அனுப்பிவைத்தால் அவர்களும் படித்து ஆராய வசதி ஏற்படும். கருத்துக்கள் காற்றோடு கலந்துபோனால் யாருக்கு லாபம்? உலகம் அறிந்து கொள்ள உதவிசெய்திடுக.

ஆசிரியர்.

செயற்கைக் குருதி

பொள்ளாச்சி "ஜெயந்தி"

மனிதனையே செயற்கையாக உருவாக்கிவிடும் காலம் நெருங்கி விட்டது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாகவே செயற்கை உறுப்புக்களை மனிதனுக்குப் பொருத்தும் முறை பழக்கத்தில் இருந்து வருகிறது. செயற்கைப் பற்களும் சிறிது பின்னால் தோன்றின. ஒருவன் தன் பற்கள் முழுவதையுமே செயற்கைப் பற்களாக அமைத்துக் கொள்ளலாம். அதோடு முக அமைப்பில் உள்ள கோளாறுகளையும் ஓரளவு சீராக்கிக் கொள்ளலாம். ஒருவரின் கண்பார்வைக்காக வேறொருவருடைய கண்ணின் விழி வெண்படலம் ஒன்றை எடுத்துப் பொறுத்துவதும், காது கேட்காதவர்கள் ஒரு யந்திர சாதனத்தின் மூலம் பயன் பெறுவதும் சமீபத்தில் சாத்தியமாயின. எலும்புப் பகுதிகளை உறுதிப்படுத்த மாழைத் (Metal Plates) தகடுகளைப் பயன்படுத்துவதும் குருதி நாளங்களுக்குப் பதிலாகப் பிளாஸ்டிக் குழாய்களைப் பயன்படுத்துவதும் சில ஆண்டுகளாகவே நடைபெறுகின்றன. ஒருவரின் சிறுநீர்ப்பைக்குப் பதிலாக மற்றொருவரின் சிறுநீர்ப்பையைப் பொருத்துவதும், சிறுநீர்ப்பை அறுவைச் சிகிச்சையின் போது செயற்கைச் சிறுநீர்ப்பையைத் தற்காலிகமாகப் பொருத்துவதும் ஒரு தலைமுறைக்கு முன்பே வழக்கத்தில் வந்துவிட்டன. மருத்துவ வரலாற்றில் இதுவே ஒருபெரிய சாதனை என்று அப்போது நினைத்தார்கள். செயற்கை இதய வால்வுகளைப் பயன்படுத்துவது ஓர் அற்புதம் என்றே ஏழு ஆண்டுகளுக்கு முன்கூட நினைத்தார்கள். ஆபத்தான, நீண்டநேர அறுவை சிகிச்சை மச்கள் ஒன்று இதய சம்பந்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, இரத்த ஓட்ட வேலையைத் திறமையாக நடைபெறச் செய்யும் இதய மூச்சுக் காற்றுப்பொறி ஒன்று சில ஆண்டுகளுக்கு முன்பே உபயோகத்துக்கு வந்தது; என்றாலும் ஒருவரின் இதயத்துக்குப்பதிலாக மற்றொருவரின் இதயத்தைப் பொருத்தபுடியும் என்பதை அன்று யாரும் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை, சில ஆண்டுகளுக்குப் பிறகு செயற்கை இதயம் பயன்படுவது சாத்தியமாகலாம்' என்றுதான் எண்ணினார்கள். ஒருவரின் இதயத்துக்

குப்பதிலாக மற்ெருவரின் இதயத்தையே பொருத்தி வெற்றி கண்ட நிகழ்ச்சி அண்மைக் காலத்தில் சாத்தியமாகி விட்டது.

மருத்துவம், அறுவை சிகிச்சை என்பவற்றைப் பற்றி வெகு நாளைய கருத்தையே இந்தச் சாதனை முற்றும் மாற்றிவிட்டது. ஒருவருடைய அங்கங்களின் ஒன்றோ பலவோ மாற்றுப் பொருளாகவோ (மற்றவர்களுடையவை) செயற்கையாகவோ இருக்குமேயானால், அவருடைய குணநலன்கள் மாறாமல் இருக்குமா? அவரைப் பழைய ஆள் என்று சொல்லமுடியுமா? மூளைக்கும் மாற்று அமைக்க முடியும் என்ற நிலைவந்தபிறகுதான் இந்தப் பிரச்சினைக்குத் தனி முக்கியத்துவம் உண்டாகும். கடன் வாங்கிய மூளை, இதயம், நுரையீரல், சிறுநீர்ப்பை பிற உறுப்புகள், இவற்றை ஒருவர் பெற்று முற்றும் மாறிய ஆளாக நடமாடலாம். இது நமக்குப் பிடித்தாலும் சரி பிடிக்காவிட்டாலும் சரி இத்தகைய ஒருவரின் உடலில் ஓடும் குருதிகூடச் செயற்கையாக இருக்கக் கூடும்.

ஒருவரின் மூளையை மற்ெருவரின் மூளைக்குப் பதிலாக அமைக்கும் சாதனை சமீபத்தில் நடைபெறக்கூடிய ஒன்ருகத் தோன்றவில்லை; என்ருலும், இயற்கைக் குருதிக்குப் பதிலாகப் பயன்படக் கூடிய செயற்கைக் குருதி ஒன்றைக் கண்டுபிடித்து விட்டார்கள். 'மனிதன், புதியவனை மாறும் முடிவில் முக்கியமானபடி இது' என்பதில் சந்தேகமில்லை. டாக்டர் இராபர்ட் பி. கேயர் என்பவர், ஹார்வார்டு பல்கலைக்கழக உயிர்வேதியல் நிபுணர், பால்போன்ற செயற்கைப் பொருள் ஒன்றை இவர் கண்டுபிடித்திருக்கிருர். இது இயற்கை குருதிக்குப் பதிலாகப் பயன்படக் கூடிய செயற்கை குருதி, 200 வெள்ளை எலிகள், ஒரு நாய் இவற்றுக்கு இந்தக் குருதியை ஏற்றி இவர் பரிசோதித்தார். ஃப்ளூரோ கார்பன் என்பதே இந்தப் பொருள்.

பி. கு: காயங்களில் அதிகமாக வீணுகிவிட்ட குருதி இழப்பை ஈடுகட்ட, தெங்கின் இளநீர் செலுத்தி உடலின் குருதி அளவைக் கூட்டி இருக்கின்ருர்கள்.

ஆசிரியர்

—✱—

அறிவுக் கல்வி

சோவியத் குடியரசின் தந்தையான லெனின், 1918 ஆம் ஆண்டு ஜனவரியில் ஒரு விசேச பிரகடனத்தை வெளியிட்டார். அதன்படி, அரசாங்கத்திடமிருந்து திருச்சபைகளும், திருச்சபைகளிடமிருந்து பள்ளிகளும் நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டன. இது தற்போதைய சோவியத் அரசியல் சாசனத்தில் (124-வது இனத்தில்) பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால், மதநம்பிக்கை உள்ளவர்களும், திருச்சபை ஊழியர்களும் தமது மத ஆசாரங்களைக் கடைபிடிக்கவும், கொள்கைகளைப் பிரசாரம் செய்யவும் இதனால் தடையேதும் கிடையாது. அதேபொழுதில், மக்களிடையே அறிவுக் கல்வியைப் போதிப்பதற்கான வாய்ப்புக்களையும் இச்சாசனம் வழங்குகிறது.

அதாவது சோவியத் மக்களிடையே, அதிலும் இளைஞர்களிடையே மனிதகுல வரலாற்றையும் இயற்கையையும் உண்மையான விஞ்ஞான, பொருள்முதல் வாத நோக்கோடு அணுகும் முறையைப் பேணி வளர்ப்பதே இந்நடவடிக்கையின் நோக்கம் ஆகும். ஆனால், நிர்வாக நடவடிக்கைகள் மூலமாகவோ அல்லது எந்தவிதமான நிர்ப்பந்தங்களின் மூலமாகவோ, இந்நோக்கம் நிறைவேற்றப்படுவதில்லை. மனமாற்றத்தின் மூலம் பள்ளிகள் தகவல் சாதனங்கள், அரசியல், விஞ்ஞான அறிவைப் பரப்புவதற்காக சொற்பொழிவுகள் மற்றும் பேச்சுக்கள் மூலம், இந்நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. இளமைக் காலத்தில் ஒருவரது கண்ணோட்டம் உருவாக்கப்படுவதால், இளம் தலைமுறையினருக்கு அரசியல் மற்றும் அறிவுக் கல்வி அளிப்பதில் பள்ளிக்கூடங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பள்ளிப் பாடத்திட்டத்தில் விஞ்ஞான நாத்திகம் என்றொரு தனிப்பாடம் இல்லை. அப்படி ஒன்று பள்ளிகளில் போதிக்கப்படவும் இல்லை. பூகோளம், வானசாத்திரம், விலங்கியல், தாவர இயல், பௌதிகம், சரித்திரம் சமூகம் விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும்போது கண்கூடான சிறந்த எடுத்துக் காட்டுகளுடன் பள்ளிச் சிறுவர்களுக்கு அறிவுக் கருத்துக்கள் உள்ளிட்ட விஞ்ஞான-பொருள் முதல் வாதக்கருத்துக்கள் கற்பிக்கப்படுகின்றன.

உதாரணமாக பூமி மற்றும் சூரிய மண்டலத்தின் அமைப்பு பற்றி ஆசிரியர் கூறும்பொழுது, பைபிள் போன்ற நூல்களில்

இதுபற்றிக் கூறப்பட்டிருப்பதையும் இன்றைய விஞ்ஞான விவரங்கள் இதுபற்றிக் கூறுவதையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். இது பற்றிய விஞ்ஞான உண்மைகளைக் குழந்தைகள் மனத்தில் பதியும் வண்ணம் எடுத்துரைக்கிறார். அதேபோல் மிருகவியல், தாவர இயல் பாடங்களை நடத்தும்போது, உயிரினங்களின் தோற்றம் பற்றிய டார்வினின் கொள்கையையும், பைபிளில்வரும் ஆதாம்-ஏவாள் பற்றிய கதையையும் எடுத்துரைத்து, விஞ்ஞான உண்மைகளைக் குழந்தைகளுக்குப் போதிக்கிறார். சரித்திரம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் மனித சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய பொருள்முதல் வாதக்கருத்துக்களைப் பள்ளிச் சிறுவர்களுக்குப் புகட்டுகின்றன. வரலாறு சம்பந்தமான மதக்கருத்துக்கள், விஞ்ஞான உண்மைகளுக்குப் புறம்பானவை என்பதை விளக்குகின்றன.

பள்ளிச் சிறுவர்களுக்கு நவீன ஆட்சி இயல் மரபுகளைப் போதிப்பதும், நாத்திகக் கல்வி போதனையில் அடங்கும்.

இவ்வாறுதான் சோவியத் பள்ளிகளூல் விரிந்த அளவில் இளைஞர்களுக்கு அறிவுக் கல்வி போதிக்கப்படுகிறது. அவர்களிடம் பொருள்முதல் வாதக் கருத்துக்களும் மனித குலத்தின் மிகச்சிறந்த அறநெறிகளும் பேணி வளர்க்கப்படுகின்றன.

—*—

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

தமிழ்ப் பண்பாட்டின் சிறந்த அம்சங்களை விளக்கிப் பரப்பவும் உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களைப் பண்பாட்டு அடிப்படையில் ஒன்று சேர்க்கவும், "உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்" (International movement for the preseruation and promotion of Tamil Culture) எனும் அனைத்துலக அமைப்பு நிறுவப்பட்டது.

டாக்டர். சாலை இளந்திரையன் தலைவராகவும், திரு இராகனகரத்தினம் (இலங்கை), திரு இலா. நாகமுத்து (தென் ஆப்பிரிக்கா), திரு ம. பெரியசாமி (சிங்கை-மலேசியா), புலவர் செ. இராசு (தமிழ்நாடு) ஆகியோர் அவரவர் நாட்டு அமைப்பாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், 3362/1, கிறிச்டியன் காலனி, புது தில்லி-110005 என்ற முகவரியில் இயங்கும். தமிழக அமைப்பாளர் முகவரி: புலவர் செ. இராசு, 5 என்.ஜி.ஓ காலனி, ஈரோடு-638001.

'கல்வெட்டுக்களில் தண்ணீர்ப் பந்தல்'

சித்திரை, வைகாசி மாதங்களில் வெய்யிலின் கொடுமையால் ஏற்படும் நாவரட்சியை நீக்க மக்கள் செல்லும் பாதைகளில் [சாலை களில்] தண்ணீர்ப் பந்தல் வைக்கும் பழக்கம் இன்று உள்ளது. இதைப்போல தண்ணீர்ப் பந்தல் சோழப்பேரரசனுன முதலாம் இராசராசன் காலத்தில் அமைந்திருந்ததை உக்கல் கல்வெட்டு நமக்கு எடுத்துரைக்கின்றது.

இராசராசனின் பணிமகனுன ஆரூரன் என்பவன் உக்கல் பெருவழியில் இராசராசன் பெயரால் ஒரு கிணறும், தண்ணீர் வைக்கத் தொட்டியும் அமைத்தான். அக்கிணற்றிலிருந்து நீர் இறைப்பார்க்கு அருள்மாறிதேவன் என்ற மரக்காலால் நாள் தோறும் நெல் இரண்டு குறுனியாக, 30 கலம் நெல் ஆறு மாதங் களுக்கும், தண்ணீர் பந்தலில் நீர் வழங்குபவர்களுக்கு நாள் தோறும் இரண்டு குறுனியாக முப்பது கலம் நெல் ஆறு மாதங் களுக்குப், தண்ணீர் பந்தலுக்கு மண்பானைகள் செய்து அளிப் பவர்க்கு ஒரு மாதத்திற்கு இரண்டு தூணியாக ஆறுமாதத்திற்கு நான்கு கலமாகவும், கிணற்றிலும், தண்ணீர்த் தொட்டியிலும் பழுது பட்டால் பழுதுபார்ப்பதற்காக ஆண்டுக்கு இரண்டு கல மும், இரண்டு தூணியும் ஆக மொத்தம் 66 கலம் 2 தூணி நெல் தானமாக அளித்தான் என முதலாம் இராசராசன் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகின்றது.

தூணி-அளவு

தகவல்:

சிரங்கம் சிதரன், எம். ஏ,

ஆதாரம்: தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி-3

முத்து. சண்முகம்

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்திருந்தவர் களில் மதுரைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களும் முதன்மையானவர். சென்ற இதழில் வந்த பேராளர் பட்டியலில் அவர்பெயர் தவறுதலாக விடுபட்டுப் போய்விட்டது. வாசகர்கள் பொருத்தருள்க.

தொல்லியல்-2

அ. அப்துல் மஜீத்து M. A.

உலோக காலம் :

மனிதனுடைய வாழ்க்கையில் உலோகம் முக்கிய இடம்பெற்றது. உலோகத்தால் ஈட்டி, வேல், கத்தி போன்றவை செய்யப்பட்டன. செம்பு தங்கம் முதலியன மனிதனின் உபயோகத்திற்குப் பயன்பட்டன.

பல ஊர்கள் சேர்ந்து ஒரே பண்பாட்டுடன் வாழ்ந்தன. இதுவே நாடாயிற்று. இந்நாட்டவர் தங்களுக்குத் தலைவனை ஏற்படுத்திக் கொண்டனர். அவனே பின்னர் நாட்டின் மன்னன் ஆனான். ஒரு நாட்டிற்கும் அண்டை நாட்டிற்கும் பண்டமாற்று தொடங்கியது. எல்லைப் பிணக்குகளும் போர்களும் மூண்டன. இக்காலத்தில்தான் தனிமனிதனின் உடமை என்பது தோன்றியது. இவற்றைக் குறித்துவைக்க மனிதன் எழுத்துக்களைக் கண்டுபிடித்தான். இதன்பின்னர் இரும்பும் கண்டுபிடிக்கப்பட்டது.

எழுத்துக்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னுள்ள காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலமென்றும், எழுத்துக்களைக் கண்டுபிடித்து அவைகளைக் கொண்டு வரலாற்றினைப் படைத்த காலத்தை வரலாற்று காலம் என்றும் அழைப்பர்.

பண்டைய பழம்பெருங்குடி மக்கள் தாங்கள் எழுதக் கற்றுக்கொண்ட பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் வரலாற்றை எழுதத் தொடங்கினார்கள். இந்தியா பழமையான நாகரிகத்தைப் பெற்றிருந்தும் அதில் வாழ்ந்த மக்கள் வரலாற்று அறிவு நிரம்பப் பெற்றவர்களாக இல்லை. ஆகவே இந்தியாவின் பண்டைய வரலாற்றைப் பண்டைய மக்கள் எழுதி வைத்துள்ள நூல்களிலிருந்து நம்மால் தொகுத்து அளிக்க முடியாத நிலைமையில் உள்ளோம். ஆகவே அகழ்வாய்வாளர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை அகழ்ந்து அகழ்வாய்வில் கண்டுபிடிக்கும் அழிந்த கட்டடங்களின் பகுதிகள், காசுகள், எழுத்துக்கள் பொறித்த பானைஓடுகள் சுடுமண்பொம்மைகள், மணிகள் இன்னும்பிற பொருள்களைக் கொண்டு பண்டைய வரலாற்றைக் கணிக்கின்றனர்.

அகழ்வாய்விலும், தொல்பொருளாய்விலும் கண்டு பிடிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பழம்பொருள்களுடைய காலத்தின்

தொன்மையை அறிந்தால்தான் வரலாறு அமைக்க முடியும். காலத்தைக் கணிப்பதில்தான் வரலாற்றின் முக்கியத்துவம் அமைந்திருக்கின்றது.

தொன்மையை விஞ்ஞானம் மூலம் கணித்தல் :

தொன்மையை விஞ்ஞானம் மூலம் கணிக்க கீழ்க்கண்ட முறைகள் கையாளப்படுகின்றன. அவையாவன: (1) சி 14 என்னும் கரித்துண்டுகளைக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை (2) நிலத்தில் உண்டாகும் பாளசிலைகளைக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை. (3) மரங்களில் உண்டாகும் வளையங்களைக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை. இவைகளேயல்லாமல் இன்னும் ஏராளமான முறைகள் கையாளப்படுகின்றன.

1. சி 14 என்னும் கரித்துண்டுகளைக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை :—

பொதுவாக உயிர்வாழும் எல்லா உயிரினங்களும் ஒரே விகிதத்தில் சி 14 என்னும கார்பனைப் பெற்றிருக்கின்றன. அவைகள் இறந்தவுடன் அவைகளுடைய அங்ககப் பொருள்கள் (Organic materials) சி 14 என்னும் கார்பனை ஒரே விகிதத்தில் இழந்து விடுகின்றன. அவைகளின் வாழ்நாளில் அரைபாகத்தில் சேர்த்துக்கொண்ட சி 14 என்னும் கார்பனை இழக்க அவைகளுக்கு 5568 ஆண்டுகளாகும் உதாரணமாக, விண்வெளிக் கதிர்கள் காற்றுமண்டலத்துடன் கலந்து வேகமாக நகரக் கூடிய நியுட்ரான்ஸ் (Nutrons) என்பவைகளை உண்டாக்குகின்றன. நியுட்ரான்ஸ் என்பவைகள் காற்றழுத்த மண்டலத்திலுள்ள நைட்ரசன் அணுக்களுடன் மோதி மிகச்சிறிய அளவினையுடைய சி 14 என்னும் கார்பனையும் ஹைட்ரசனையும் உண்டாக்குகின்றன. சி 14 ஆக்சிசனுடன் சேரும்பொழுது கார்பன்-டை ஆக்சைடாக மாறுகிறது, கார்பன்–டை ஆக்சைடில் சி 14 என்னும் கார்பன் இருக்கின்றது. சி 14 காற்றழுத்த மண்டலத்துடன் (Admosphere) கலந்து விடுகின்றது. தாவரங்கள் கார்பன்-டை ஆக்சைடை கிரகிக்கின்றன. தாவரங்களை கால்நடைகள் உண்ணும்பொழுது தன்னுள் சி 14 என்னும் கார்பனை சேர்த்துக் கொள்கின்றன. தாவரங்களும், கால்நடைகளும் இறந்தபிறகு சி 14 என்னும் கார்பன் அவைகளிடமிருந்து பிரிகின்றது. சிறிது சிறிதாக நைட்ரசன் பழைய நிலைக்கு (Reverts) வருகின்றது. அவைகள் இறந்த 5568 ஆண்டுகளுக்குப் பிறகு தன்னிடத்தே சேகரித்து வைத்திருந்த சி 14 என்னும் கார்பனின் ½ பாகம் நீங்கி ½ பாகம் மீதியாக இருக்கும். 11136 ஆண்டுகளுக்குப் பிறகு ¼ பாகம் மீதி

யாக உள்ள கார்பனில் ½ பாகம் நீங்கி ½ பாகம் மீதியாக இருக்கும் அவைகள் இறந்த 19704 ஆண்டுகளுக்குப் பிறகு ¼ பாகம் மீதியாக உள்ள கார்பனில் 1/8 பாகம் நீங்கி 1/8 மீதியாக இருக்கும். 700000 ஆண்டுகளுக்குப் பிறகு சி 14 என்னும் காபன் இறந்த அவைகளிடம் இருக்கவே இருக்காது. இம்முறையைக் கொண்டு இறந்த அவ்வுயிரின் காலத்தை சுலபமாகக் கணிக்கலாம்.

உயர்வேதியல் சோதனைச் சாலைகளிலேயே இக்கணிப்பு நிகழும். தொல்லியல் அகழ்வுகளில் கிடைக்கும் பொருட்களைக் கைபடாமல், எடுத்து பாலிதின் பைகளில் இட்டுக் காற்றுபுகாமல் கட்டி பூனாவில் உள்ள டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களுக்கு அனுப்பவேண்டும். இக்கணிப்பை அவர்கள் இலவசமாகச் செய்து தருகிறார்கள். இந்தியாவிலேயே இது ஒன்று தான் அவ்வகை ஆராய்ச்சிநிலையம் ஆகும். (தொடரும்)

—*—

இலங்கை நாணயச் செலாவணி

இலங்கை நாணயத்திற்கும் ரூபாய் என்றுதான் பெயர். ஒரு ரூபாய் 100 சதம் ஆகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்திய ரூபாய் ஒன்றுக்கு இலங்கையின் 81 சதம் சமம். இதன்படி பார்த்தால் இந்திய ரூபாய் இலங்கை ரூபாயைவிட மதிப்புக் குறைவாகத் தோன்றும்.

ஆனால் உண்மைநிலை வேறாக உளளது. இலங்கை செல்வதற்கு ஒவ்வொருவருக்கும் 21 பவுன் அனுமதிக்கிறார்கள். ஒரு பவுன் ரூ 19-40க்குச் சமம். அதனால் 407-50 ரூபாய் கொடுத்து 21 பவுன் பெற்றுக கொள்ளலாம்

இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுச் செலாவணி அதிகம் பெறுவதற்காக அதன் ரூபாய் மதிப்பில் 65% கூடுதலாகத் தருகிறது. ஒரு பவுன் 16 இலங்கை ரூபாய்க்குச் சமம். அதற்கு 65% கூடுதலாகப் போட்டால் ஒருபவுன் விலை ரூ 26-40 ஆகின்றது அதனால் 21 பவுனுக்கு 554-40 இலங்கை ரூபாய் கிடைக்கும். அதாவது 407-50 இந்திய ரூபாய் 554-40 இலங்கை ரூபாய்க்குச் சமம். 100 இந்திய ரூபாய் 136-10 இலங்கை ரூபாய்க்குச் சமம். அல்லது 100 இலங்கை ரூபாய் 73-50 இந்திய ரூபாய்க்குச் சமம். கள்ளச்சந்தையில் இலஙகை ரூபாய் 100க்கு இந்திய ரூபாய் 65 கிடைக்கின்றது. பவுன் மதிப்பு அவ்வப்போது ஏறி இறங்குவதால் இந்த மதிப்பும் மாறிக்கொண்டே இருக்கின்றது.

Extract from the paper :

Electronic Tamil Typewriter by
Er. THILLAINAYAGAM from London

V ANOMALIES

1. There are 247 characters in the Tamil alphabet and 65 'Kirantha' characters making a total of 312 characters. 155 different types are required to print these characters. The characters could be regularised without losing their identity. Let us take the consonants first. Consonants are represented by a dot on the characters bearing அ sound. These dots could be displaced to the right, thus to print all the consonants we need only one key. After all our literature were written on ola leaves, and the dots to represent the consonants were dispensed with. Here we are not dispensing with the dot, but displacing to the right. The characters ணா, னா, றா could be written like the other characters bearing the sound ஆ. The characters லை, ளை, ணை, னை could be written like other characters bearing the sound ஐ. The symbol ? in characters bearing sound இ could be displaced to the right, and all the characters bearing sound இ could be written with the characters bearing the sound அ followed by the symbol ?. Similarly, characters bearing sounds எ, ஏ, ஐ could be written with characters bearing sounds அ followed by the symbols ெ ே and ை respectively. Adoption of this method of writing, reduces the number of types necessary to print all the 312 characters to 44. However, punctuation marks, special characters, numerals ,and mathematical symbols have to be represented by separate types individually.

இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை வளாகத்தின் தமிழ்த்துறைத் தட்டச்சர்
திரு. கோவிந்தப்பிள்ளை அவர்களின்
எழுத்துரையின் ஒரு பகுதி

உயிர்மெய் உ, ஊ, வரிகள் :

கி, கீ என்ற உயிர்மெய் எழுத்துக்களின் வடிவினைக்காட்ட மெய்யெழுத்தின் சார்பாக 'க' வும் உயிரெழுத்தின் சார்பாக (ி) விசிறியும், (ீ) சுழி சேர்ந்த விசிறியும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த முறைப்படி 'உ' வரியைப் பார்த்தால் உயிர் ஏறிய தொடர்பு எழுத்தமைப்பில் தெரிவது குறைவு. ஆனால், 'கூ' என்ற எழுத்தினை நோக்கினால் 'க' வும் 'உ' வும் இணைந்திருப்பதைக்காணலாம். அவ்வாறிணைக்கப்பட்ட பொழுதிலும் அதனைக் 'கு' எனக் கூறாது 'கூ' என நெடிலாகவே கருதுகின்றோம். 'கூ' வரியிலுள்ள ஏனைய எழுத்துக்களுக்கு இத்தொடர்பும் கிடையாது. அவற்றுள் 'கூ' ஒருவிதமாகவும் ஙூ, சூ, பூ, லூ, யூ என்பன 'ஆ' போன்றும் ணூ, தூ, நூ றூ, னூ என்பன ஒருவகையாகவும், டூ, மூ, ழூ என்பன வேறொரு வகையாகவும் தற்பொழுது எழுதப்படுவதுண்டு. எனவே, இந்த முறையில் வேறுபடும் பல்வேறு வகையான எழுத்துக்களைப் பயிலும் பள்ளிச் சிறுவர்களும், பிறமொழியாளர்களும் எழுத்துக்களைப் பயில்வதிலேயே பல மாதங்களைச் செலவிட வேண்டியவர்களாகின்றனர். எனவே, கா, கி, கீ என்ற வரிகளை ஒப்ப ஒரே சீரளவினை உடைய அமைப்பு முறையொன்றினை அமைத்தல் சாலவும் உகப்பானதாகும்; சுலபமானதுமாகும். அதற்கு 'க' எனும் உயிர்மெய் எழுத்துடன் 'உ' எனும் உயிரினைப் பக்கம் மாற்றி முறையே சுழியின்றியும் (ʋ) சுழிசேர்த்தும் (ʋ) எழுதுதல் மிகப் பொருத்தமானதாகும். இம்முறை எழுத்தோட்டத்திற்கும் காலச் சுருக்கத்துற்கும் உகந்ததாகும். அதேபோன்று அச்சு முறைக்கும் தட்டெழுத்து முறைக்கும் இலகுவானதாகும், இம்முறையைப் பின்பற்றி எழுதுவோமானால், தற்பொழுது தட்டெழுத்து இயந்திரங்களில் உபயோகிக்கப்படும் பெரும்பாலான எழுத்துக்களைக் குறைக்கவும் வழியமையும். தற்பொழுது நாம் உபயோகிக்கும் கிரந்த எழுததுக்களாலான ஸ, ஜ, ஷ என்பனவற்றுக்கும் இவ்வடையாளங்களை உபயோகிக்கலாம். அவ்வாறு உபயோகிப்போமாயின் கிரந்த அடையாளங்களான ு, ூ, இரண்டையும் நீக்கிவிடலாம். மேற்கூறிய முறைப்படி நாம் கு, கூ வரிகளை அமைப்போமாயின் அவை பின்வருமாறு அமையும்.

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல

வ ழ ள ற ன ஸ ஜ ஷ

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல

வ ழ ள ற ன ஸ ஜ ஷ

மேற்சொல்லிய முறையைவிட வேறு முறைகளைக் கையாள்வோமாயின் அவை தட்டெழுத்து முறைக்குக் கால அளவு கூடுதலாகவே தேவைப்படும். அம்முறை அவ்வளவு பொருத்தமானதாகக் கருதப்படமாட்டாது.

மேற்கூறப்பட்டுள்ளபடி நமது மொழியின் வடிவமுறை அமையுமெனில் தமிழ் மொழியைக் கற்கும் வெளிநாட்டறிஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் சில பொது விதிகள் மூலமாகவே தமிழ் எழுத்து வரிவடிவங்களை இலகுவாகப் புகுத்திவிடலாம்.

—※—

இருமொழித் தட்டச்சின் விசைப்பலகை



1. ஆங்கில எழுத்துக்கள் இடம் மாறுமல் உள்ளது காண்கி.

2. தமிழ் எழுத்துக்களும் இடம் மாறவில்லை. உயிர்மெய்க்குறிகள் ஒருசில மட்டுமே மாறியுள்ளன.

3. ; ஆகிய சாவிகளை மட்டும் அரைடிகிரி நகருமாறு அமைக்கலாம்.

[அமைப்புரிமை: கொடுமுடி ச. சண்முகன்]

மொழிக் கோரிக்கைகளும் மொழிச் சட்டங்களும்

இலங்கை அ. சிவராசா பி. ஏ.

அண்மைக்கால இலங்கை அரசியலில் மொழிப்பிரச்சினை மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகவும் சமூக ரீதியில் இனங்களிடையே பரஸ்பர எதிர்ப்புணர்வினையும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தும் ஒன்றாகவும் ஆகியிருக்கிறது. அதுமட்டுமல்லாது, தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் குந்தகம் விளைவிப்பதொன்றாகவும் இருந்து வருகிறது. சமூக பொருளாதார மாற்றங்கள் எதிர்பார்ப்புகள் கலாச்சார பாரம்பரிய இனஉணர்வுகள் போன்றனவே இம் மொழிக் கோரிக்கைகளுக்கு பின்னணியாக அமைந்துள்ளதாகத் தெரிகின்றது. ஆரம்பத்தில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் உத்தியோக அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் என்பதை சிங்கள மக்களின் அரசியல் தலைவர்கள் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாதல் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததோடு அதனைச் செயலும் படுத்தினர். பின்னர், 1958 ஆம் ஆண்டில் நியாயமான தமிழ் உபயோகம் என்பதை ஏற்றுக் கொண்டனர். தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்று தொடர்ச்சியாகக் கோரி வந்தபோதிலும் சமரசம் காண்பதற்காக சில குறைந்தபட்ச கோரிக்கைகளை முன்வைக்கத் தயாராய் இருந்தனர் என்பனவே, அவதானத்துக்குரியதாகும். இவற்றுக்கு மத்தியில் மொழிப் பிரச்சினை என்பது உண்மையில் ஒரு பொருளாதார பிரச்சினையே என்றும் புதியதொரு சமூக பொருளாதார அமைப்பினை அதாவது சோசலிச சமுதாயம் ஒன்றினை அமைப்பின் அங்கு இப்பிரச்சினை தீர்ந்து விடும் என்ற கொள்கையை இடதுசாரிகள் முன் வைக்கின்றனர்.

ஆகவே, காலத்துக் காலம் இம் மொழிக்கோரிக்கைகள் மாறி வந்தமைக்கான பின்னணிகள் எவை? அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் எவை? என்பதைப் பற்றி சமூக பொருளாதார தளங்களில் நின்று ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

(கட்டுரைச்சுருக்கம்)

சின்ன ஏரிக் கல்வெட்டு

அமைவு:— சேலம் மாவட்டம் சேலம் வட்டம் பேளூருக்குத் தென்கிழக்கிலுள்ள சின்ன ஏரிக்கரையிலுள்ள இரண்டு கல்வெட்டுக்களில் ஒன்று

மொழி : தமிழ்
காலம் : குலோத்துங்க சோழன் காலம்
கண்டுபிடித்தவர் : புலவர் புது. பே. வேங்கடராமன்

வாசகம் : 1. ஸ்வஸ்திஸ்ரீ
2 மிலாடாந
3. ஜனநாதவள
4. நாட்டுத்துரவிநா
5. ட்டு வெளியூர்வண்
6. ணாத்திதாழிவடுகி
7. இட்ட தூம்பு.

குறிப்பு: சோழர் காலத்தில் நடுநாடு முதலாம் இராசராசனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றான சனநாதன் என்ற பெயரைக் கொண்டிருந்தது தூம்பு-மதகு. இக்கல்வெட்டு தற்போது பேளூர் என்று வழங்கும் பழைய வெளியூரில் இருந்த வண்ணாத்தி தாழி வடுகி என்றவள செய்த சமுதாயத் தொண்டைக் குறிக்கிறது.

—※—

இலங்கை

இலங்கை அரசாங்கம் குடியரசானதும் சிலோன் என்ற பெயரை 'சிரிலங்கா என மாற்றிக் கொண்டது. சிங்களத்தில் மட்டும்தான் சிரீலங்கா. அதிகார பூர்வதான தமிழ்ப் பெயர் இலங்கை தான். அவர்களின் ரூபாய் நோட்டைப் பார்த்தாலே புரியும். அந்த நாட்டு ஏடுகள் தம் பிரதமரின் பெயரை சிறீமாவோ பண்டாரநாயகா என்றுதான் எழுதுகின்றன.

ஆனல் இந்திய வானொலியும், தமிழ் ஏடுகளும் வலிந்து 'ஸ்ரீலங்கா' 'ஸ்ரீமாவோ' என்றே எழுதுகின்றன. என்னே வேடிக்கை,

சீதனம்

பெண்களின் திருமணத்திற்கு சீதனமாகப் பெருந்தொகை கேட்பதுபற்றி அகில இந்திய வானொலியின் சென்னை நிலையத்தில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கொடிய பழக்கத்தை ஒழிக்க "இளைஞர்கள் முன்வரவேண்டும். பிள்ளைகளின் பெற்றோர்கள் முன்வரவேண்டும், காஞ்சிப் பெரியவர் யோசனையை ஏற்று சீதனம் வாங்குவதை நிறுத்த வேண்டும்" என்றுதான் கூறினார்களேயன்றி பின்வரும் யோசனைகள் அவர்களுக்குத் தோன்றக்காணோம்.

1. காதல் மணத்தை ஊக்குவிப்பது.

2. கலப்பு மணத்தை அனுமதிப்பது. குறைந்த அளவு சீதனம் கேட்கும் சாதிப்பிள்ளைகளுக்குப் பெண் கொடுக்கலாமே.

3. ஆடம்பரமாகத் திருமணம் செய்யும் பழக்கத்தை நிறுத்தி பதிவு அலுவலகத்தில் முடித்துக் கொள்ளலாம். திருமணச் செலவுக்காக ஒதுக்கி வைத்த தொகையை மணமக்களுக்கு முதலீடாக அளிக்கலாம். வேலைவாய்ப்பில்லாத மாப்பிள்ளையாக இருந்தால்கூட அத்தொகை பிழைப்பதற்கு வழி வகுக்குமே.

ஆராய்ச்சி

பதினான்காம் இதழ் வெளிவந்துவிட்டது.

1. சிந்து நாகரிகத்திற்கு முந்திய பிம்பெட்கா நாகரிகம்
2. தஞ்சைக் கோயிலின் செலவுகளும் வருவாய்த்துறைகளும்.
3. ஆற்றுப்படை--சமூகவியல் ஆய்வு
4. சாத்தன்வழிபாடு
5. ஆழ்வார்கள் கால பாண்டிநாட்டுச் சமுதாயம்
6. மூளை ஒருபேழையில்--கணிதி பற்றிய கட்டுரை

அனைத்தும் முதன்மையான கட்டுரைகள். கொங்கு வாசகர்கள் படிக்க வேண்டியவை.

தனி இதழ் ரூ 3. 50/- ஐந்தாண்டுக்கு ரூ 50/

ஆசிரியர்
நா. வானமாமலை

258, திருச்செந்தூர் சாலை, பாளையங்கோட்டை-627002

தமிழக வரலாற்றுப் பேரவை

திருச்சி கிளை

12-1-74 அன்று தொல்லியல்துறை இயக்குநர் இரா. நாகசாமி அவர்களால் திருச்சிக்கிளை துவக்கப்பட்டது. முன்னுள் அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் T. M. நாராயணசாமி தலைமை ஏற்ருர்கள். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி வை. இராமமூர்த்தி, கிளைச்செயலர், தமிழக வரலாற்றுப்பேரவை 9, இராமராயர் அக்கிரகாரம், தெண்ணூர், திருச்சி-620007.

கோவை கிளை

Dr. தா. எ. ஞானமூர்த்தி கோவைக்கிளையினைத் தொடங்கி வைத்தார்கள். 'முத்தரையா' பற்றி இரா. சந்திரசேகரன் தன் கட்டுரையைப் படித்தார். பேரவை உறுப்பினர்கள் அன்றுமாலை ஆனைமலை சென்று நாகேசுவரர் கோயில் கல்வெட்டுகளைப் படியெடுத்து வந்தனர். புலவர் இராசுவும் உடனிருந்தார்.

நாட்டுப்புற இலக்கியக் கலைக்கழகமும், ஊர்ப் பெயராய்வுக் கழகமும் துணை அமைப்புகளாகத் தோன்றின. 'முட்டத்து நல்லூர்' பற்றிய கட்டுரையை ஐ. இராமசாமி படித்தார். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இரா. சந்திரசேகரன், தமிழ்த்துறை அரசு கலைக்கல்லூரி, கோவை-641018.

—※—

வரவேற்பு

ஃ நான்காவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை சென்று வந்தோருக்கு, தமிழ்க்கலை மன்றமும் மறைமலை அடிகள் நூலகமும் 4-2-74 அன்று வரவேற்பளித்தன. டாக்டர் ந. சஞ்சீவி தலைமையேற்ருர்.

தமிழகத்துப் பேராளர்களுள் சிங்கப்பூர் பெரியசாமி அவர்களும் கலந்து கொண்டார்.

இறுதிநாள் பொதுக்கூட்டத்தில் நடைபெற்ற சோக நிகழ்ச்சிக்கு வருத்தம் தெரிவித்தும் உயிரிழந்த யாழ்வாசிகளுக்கு அனுதாபம் தெரிவித்தும், பல எதிர்ப்புகளுக்கிடையே மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்த இலங்கைக் கிளைக்கு பாராட்டுத் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தொடக்கத்தில் இரா. முத்துக்குமாரசாமி வரவேற்க இறுதியில க. ப. அறவாணன் நன்றி கூறினர்.

ஃ 15-2-74 அன்று வடசைதை, நந்தனம் அரசுயர்பள்ளி வரவேற்புஅளித்தது.

வாசகர் நோக்கு

சல்லிக்கட்டு

கொங்கு (திசம்பர் 73) இதழில் சல்லிக்கட்டு என்பதுபற்றி மதுரைக்காரர் கூறிய கருத்துடன் தொடர்புடைய ஒன்றை, தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ள 'சிறப்புப்பெயர் அகராதியில்' கண்டேன் அது வருமாறு :

சல்லிக்கட்டு : முன்னாளில் சல்லி என்ற பெயருடைய யாதவ வீரன் ஒருவன் இருந்தான். அவன் ஏறு தழுவுதல் என்னும் காளைபிடிக்கும் விளையாட்டை நடத்தினன். அவ்விளையாட்டு வெகுகாலமாக மாடுபிடி, எருதுபிடி, காளைப்போர் மஞ்சி விரட்டு என்னும் பல பெயர்களோடு இவன் பெயராலும் 'சல்லிக்கட்டு' என்றும் வழங்கி வருகிறது.

பக்கம் 209-10

இனியேனும் எல்லோரும் 'ஐ' கரத்தை விட்டு, 'சல்லிக்கட்டு, என்பாராக.

புலவர் பொ. முனியப்பன், கூகலூர்.

ஏலாக்குறிச்சி

நவம்பர் 1973 கொங்கு இதழ் கண்டேன் மகிழ்ச்சியடைந்தேன், "கல்லுங் காவேரியும் புல்லும் பூமியும்" எனும் கட்டுரையில் (பக்கம் 272) வீரமாமுனிவர் வாழ்ந்துவந்த ஏலாக்குறிச்சி என்னும் ஊர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது ஏலாக்குறிச்சி கொள்ளிடக்கரையில்அமைந்து திருச்சி மாவட்டத்தில் அடங்கியுள்ளது என்பதனைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கரூர் மா. இராசசேகரத்தங்கமணி.

எழுத்து

இன்றைய பரந்த உலகில் '26' எழுத்துக்களே கொண்ட ஆங்கிலம் அரசுபுரிவதைக் கண்கூடாகக் கண்டபின்னர் தமிழெழுத்துக்களில் சீர்திருத்தம் மிகவும் இன்றியமையாதது என்பதை நாம் உணர முடியும்; உணரவும் வேண்டும்.

சென்னையில் கூடிய தமிழன்பர் மாநாட்டில் [1934-ல்] தமிழெழுத்து சீர்திருத்தம்பற்றி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. அதன்படி மறைந்த சீர்திருத்தச் செம்மல் பெரியார் அவர்கள் 'விடுதலை' நாளிதழில் ஞ, ஞு, ரு. ளா, ணை, லை, ளை என்பதற்குப்பதிலாக ணா, னா, றா, ணை, னை, ளை, லை என்ற வடிவத்தில் கொண்டுவந்தார். இன்னும் அது நடைமுறையில் இருக்கிறது.

14, 15-2-1948ல் சென்னையில் நடைபெற்ற அகிலத் தமிழர் மாநாட்டிலும் இது வற்புறுத்தப்பட்டு, அதன்படி இகர, ஈகார உகர, ஊகார உயிர்மெய்யெழுத் துக்கள் சுதேசமித்திரன் நாளிதழில் வெளியிடப் பட்டன.

மேலும் காலம்சென்ற புலவர் குழந்தை அவர்களும் தமிழெழுத்துச் சீர்திருத்தம் என்னும் புத்தகத்தில் உயிரெழுத்தாகிய 'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் திருத்தம் செய்யலாம் என்று கூறுகின்றார்.

தாங்கள் '46' எழுத்துக்களேயிருப்பதால் இந்தி தட்டச்சிலே வரும் பிரதிகளுக்கு தொல்லைக் கொடுக்கவில்லை யென்றும் கூறியுள்ளீர்கள். உண்மைதான் புலவர் குழந்தை முறைப்படி நம் தமிழ் எழுத்தும் 131 வடிவங்களிலிருந்து 47' ஆகக்குறைந்து விடுகின்றன. தாங்கள் கூறியிருந்த அறிக்கையில் 'முகவரி' என்பதற்கு 'மு' எழுத்தின வடிவத்தை 'ம~' என்று காட்டியிருக்கின்றீர்கள். வரவேற்க வேண்டியதே!

எனவே, தங்களைப்போன்றோர்கள் இந்த முயற்சிக்கு உரு கொடுக்க முன்வருவது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

வல்லம் இல. ஆலயமுகன்

—※—

வள்ளலார் நூற்றாண்டு

வடலூர் வள்ளலார் சித்திபெற்று ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டது (30-1-1874). வடலூரில் நிறுவப்பெற்ற தியானமண்டபம் பொள்ளாச்சி நாச்சிமுத்துக்கவுண்டர் அறநிலையத்தாரால் புதுப்பிக்கப்பட்டு 30-1-1974 இல் திறந்து வைக்கப்பட்டது. வள்ளலார் கண்ட ஒருமைவாழ்வு, வள்ளலார் வாழ்வும் வாக்கும் என்ற இரு நூல்களும் வெளியிடப்பட்டன.

அவள், அவன், அது.

படைப்பிலக்கிய வரிசையில் புதிதாக சேர்ந்துள்ள கதை நூல். சமுதாயத்தில் உலவிவரும் உணர்வினைப் பெருகின்றோம்; சில தழுவல்கள்; சில தாய்த்திருநாட்டு உணர்வுகள். பெண்மை தாய்மையாகிப் பல கோணங்களில் உலா வருகின்றது. படித்து முடிக்குமுன் கீழே வைக்க முடியவில்லை. கண்ணன், மரியம், வாணி, இந்திரன், அவள் அனைவரும் நினைவில் நிற்கின்றனர்.

ஆசிரியர்: க. ப. அறவாணன் விலை ரூ 3/- 80 பக்கம்.
கிடைக்குமிடம்: தமிழ்க்கோட்டம், சென்னை-29

—※—

சேலம் மாவட்டக் கோயில்கள்

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், நாமக்கல், சேலம் வட்டங்களில் உள்ள கோயில்களைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. இதை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு ஆராய்ச்சிகள் தொடரவேண்டும். ஆர்ட்தாளில் 8 பக்க ஒளிப்படங்களும், சேலம் மாவட்ட நிலப்படமும் நூலை அணி செய்கின்றன.

ஆசிரியர்: அ. இராசேந்திரன் M. A. விலை ரூ 4-50/- 132 பககம்.

—※—

தொல்காப்பிய கலைக் களஞ்சியம்

தொல்காப்பியம் பற்றிய சொல் அடைவும், பொருள்குறிப்பும் தொகுக்கப் படுகின்றன். தொல்காப்பியம், அது தொடர்பான செய்திகள் எங்கு வெளியாகி இருந்தாலும் அவைபற்றிய தகவல்களை அனுப்பிட வேண்டுகிறோம். பின்னர் வெளியாகும் தொல்காப்பியக் கலைக்களஞ்சியத்தில் அவை நன்றியுடன் குறிப்பிடப் படும்.

க. ப. அறவாணன், தமிழ்க்கோட்டம்
60 முனிரத்னம் தெரு, அய்யாவுநாயுடு குடியிருப்பு,
சென்னை-600029.

ஈழத்தமிழ்

கடுகதி அஞ்சல் – விரைவஞ்சல்

இளைப்பாறினர் – Retired

பாவித்தல் – பயன்படுத்துதல்

சித்தியடைதல்-தேர்வில்வெற்றி

ஓம்-ஆம் பெறுதல்

புகைஇரதம் – Train

கதைத்தல் – பேசுதல்

உறங்கலிருக்கை–Sleeping berth

கந்தோர் - அலுவலகம்(Holland)

பொடியன் - திருமணமாகாத இளைஞர்

எழுத்துப்பெயர்த்தல்

David Street-டேவிற்வீதி

Textiles-ரெக்ஸ்ரைல்ஸ்

Milk white - மில்க்வைற்

கொங்கு

தனி இதழ்		0- 30
ஆண்டுக்கட்டணம்	ரூ	3- 50
மூன்றாண்டுக்கட்டணம்	,,	10- 00
ஆயுட்கட்டணம்	,,	100- 00
ஆய்வுத்தேன்	,,	4 00
கொங்கு தொகுதிகள் 1, 2, 3		5 00

நிர்வாகி, 'கொங்கு'

26, இந்திரா நகர், சென்னை-600020.

Phone Office. : 83745 Resi. : 811455

RAVI METAL WORKS

Manufacturers of

Automobile Agricultural Components

Sanitary & Pump Fittings

3/129, Dr. Natesan Road,

Triplicane :: MADRAS-600005

நல் வாழ்த்துக்கள்

S. சுப்ரமணியம்

கட்டிடவேலை ஒப்பந்தக்காரர்

236, A. சூரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி,

சென்னை-600005.

ஏன்

இப்படி

வீண் செய்கிறீர்கள்

உணவை

பலருக்கு
அது மிகவு
தேவைப்
படுகிறதே

வீட்டிலும், விருந்துகளிலும், ஹோட்டல் களிலும், கிளப்புகளிலும் உங்களுக்குத் தேவையானதையே போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தை களுக்கும் இந்தப் பழக்கத்தைக் கற்றுக் கொடுங்கள். இதனுல் உங்களுடைய பணமும் மிச்சமாகும்; நாட்டின் வசதியும் வீணுகாது.

உணவு
அத்தியாவசிய
மானது



வீண்

 பதிவு எண் :— M 8753

விரைவாக-
வேகமாக-
ஏ. பி. டி.
பார்சல் சர்வீஸ்
சேவைசெய்கிறது.

விரைவுக்கு அனுமன்

கம்பர் சொன்னார் :

"எண்ணுக்கும்
அளவிலாத
அறிவினோர்
இருந்து நோக்கும்
கண்ணுக்கும்-
கருதும்
தெய்வ மனத்துக்கும்
கடியன் ஆனான்"

எண்ணத்தைவிட-
அளவற்ற ஞானச் செல்வர்களின் யோகக்
காட்சியைவிட-
தேவர்களின் மனத்தைவிட
வேகமாகப் பாய்ந்து சென்றான் அனுமன்.

A. B. T. பார்சல் சர்வீஸ்

226, டாக்டர் நஞ்சப்பா சாலை, அஞ்சற்பெட்டி எண் 1414
கோயம்புத்தூர் - 18.

ஆசிரியர் : புலவர் செ. இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி, ரேணுகா பிரிண்டர்ஸ்,
வெளியிட்டவர் : ச. பிரகதம்.. [சென்னை-20.
அலுவலகம்: 26, இந்திரா நகர், சென்னை-600020.